(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER PREVENTION OF CORRUPTION ACT, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case Number | : | Spl.C.C.No.1/2022 |
| Deposition Of Witness for | : | PW1 |
| Name | : | **Tr.Muthukaluvan** |
| Father's/Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **21st June 2024.**

(எதிரி ஆஜர்.. It is recorded as directed by the **Hon'ble High Court, Madras vide R.O.C.No.65929-A/2022/F1, P.Dis.No.17/2023 dt.23.01.2023. இந்நீதிமன்றத்திற்கு பிரிவு 22(c) Prevention of Corruption(Amendment) Act, 2018 ன் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் அடிப்படையில் இந்த சாட்சி விசாரணை எதிரி தரப்பு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜராகாத நிலையில் இச்சாட்சியை குறுக்கு விசாரணை செய்வதற்கான உரிமை பாதிக்கப்படாத வகையில் பதிவு செய்யப்படுகிறது.)**

சாட்சி ஆஜர். சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை</u> :

1. நான் தற்போது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) சிவகங்கையில் பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 21.08.2020 ல் தேதி முதல் வருவாய் கோட்டாட்சியராக சிவகங்கையில் பணிபுரிந்து வந்தேன். எதிரியை பணிநீக்கம் செய்யும் அதிகாரம் எனக்கு உண்டு. எதிரி இளையான்குடி தெற்கு குரூப்பில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தார்.

2. சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநர் அலுவலகம் கடித நாள் 30.07.2021 ன் படி கடித எண் RC.68/2021/REV/SG பெறப்பட்ட கடிதத்தில் ஒப்படைப்பு மகஜர், பார்வை மகஜர், முதல் தகவல் அறிக்கை, கைப்பற்றுதல் மகஜர், சாட்சிகளின் வாக்குமூலங்கள், எதிரியின் வாக்குமூலம், குற்ற எண் 1/2021 வழக்கு சம்பந்தமான அனைத்து ஆவணங்களும் அதில் இருந்தன. நான் அதை முழுமையாக பரிசீலனை செய்தேன்.

3. எதிரி அரசுப்பணியை செய்வதற்காக கருணாகரன் என்பவரிடமிருந்து ரூ.4000/- ஐ கையூட்டாக பெற்ற விபரத்தை நான்

தெரிந்து கொண்டேன். நான் வழக்கில் புலன் விசாரணை அதிகாரினை என்னுடைய அலுவலகத்திற்கு வரவழைத்து வழக்கு சம்பந்தமான விபரங்களை கேட்டு அறிந்தேன். ஆய்வாளர் என்னிடம் பகுப்பாய்வு அறிக்கையின் சான்றளிக்கப்பட்ட நகலை காண்பித்தார். அதனையும் நான் பரிசீலனை செய்தேன்.

4. எதிரி மீது குற்ற வழக்கு தொடர முகாந்திரம் இருப்பது குறித்து நான் ஆவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையில் முழு மனதாக தெரிந்து கொண்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் இசைவாணை என்னால் வழங்கப்பட்டது. நான் இசைவாணையை முழுமனதுடன் வழங்கினேன். இந்த இசைவாணையில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். நான் வழங்கிய **இசைவாணை அ.த.சா.ஆ.1** ஆகும். வழக்கு சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை எனது அலுவலகத்திற்கு வந்து விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**(எதிரி தரப்பு வழக்கறிஞர் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகாததால் எதிரி**

**தரப்பு குறுக்கு விசாரணைக்காக இவ்வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)**

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct"

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Location: Sivagangai
Date: 2024.06.21 16:33:10 +0530

**Special Judge,**
P.C.ACT Cases,
Sivagangai.